ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீபார்த்தசாரதிபெருமாள்பேரில்
பலசரக்கு
ஏலப்பாட்டு,

இஃது

கோகுலாபுரம்.

அருணாசலமுதலியார்

அவர்களால்பார்வையிடப்பட்டு

கொண்ணூர்


மாணிக்கமுதலியார்

அவர்களால் தமது

மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பார்த்திவ௵



திருவல்லிக்கேணிபார்த்தசாரதியானை

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள்பேரில்

பலசரக்கு

ஏலப்பாட்டு.

ஏலேலோ-குருபாதம்- அம்பாள் - விநாயகனை
முன்னடவாய் நான்முகன்றன் சரஸ்வதியே எந்தனு
விலுள்ளேவாருமம்மா - சீர்பொழியுந்திருவல்லிக்கே
ணியெனும்புரிதனிலே வாசமாகவீற்றிருக்கும்- பார்
த்தசாரதியுந் தேவிடன் வேதவல்லித் தாயார்க்கு க
ப்பல் காணிக்கைகள் வெகுவிதமாய் பாரமுடன் சரக்
குகட்டி யோடிவருஞ் சம்மதிக்க(சரூர்)நாழிகைபொ
ன்றுக்கு நாநூறுகப்பல் நாடோறுந்தப்பாமல் தின
ம்வந்திறங்கும் சீருடைய படித்துறைக்கு கப்பல்

வருஞ்செய்தி சென்னபட்டணங்கோட்டை சனங்களெல்லாங்கேட்டுப்பூரித்து ஆனந்த சந்தோஷமாகப் புதுமைகள்பார்க்கவந்து கரைதனிலேநிற்க பாரியவர்த்தகர்கள் செட்டிகோமுட்டி பட்டணத்திலுள்ளகுடியின்னஞ் சிலபேர்கள்-வேணுமென்றசரக்குகள்வேணபடிகொள்ள - மாட்டதனில் பணங்கொணர்ந்துவந்தவர்களிங்கேபேரானபேர்பெற்ற சென்னைபுரியாரும் பெரியதுரை சின்னதுரை யெல்லட்டுங்கேட்டு நாடாரு மிங்கிலீஷ்கொடிக்காரரெல்லாம் நாலாயிரஞ் சனங்கள் வந்துமேநிற்க ஓடாததண்ணீரிலங்கர்கள் பாச்சி - யொருபுரமாய் கப்பலெல்லாங் கரைதனிலே சேர்க்க வேதவல்லித்தாயார் கடாக்ஷத்தினாலே வேகமுடன் கப்பல்வந்து சேர்ந்துதையா சுவாமி (ஏலேலோ)

பொங்கிவருங்கடலோரந்-தாயார் பூமிகளாஞ் சந்நிதிக்கே மங்களமாஞ் சரக்குகப்பல் இங்கேவந்திறங்கும் படித்துறைக்கு-நிரம்பிவருஞ்சரக்குகட்டி-வெரபாரத்துடன்கனத்துவரும் தங்கிவரும் வழிகளிலே சற்றே தாமதங்களில்லாமல் (ஓடம்) எங்கெந்ததீவாந்தரத்திலிருந்து எண்ணிசொல்லி முடியாதசரக்குகளைக்கொண்டு பஞ்சவர்ணக்கிளிகொஞ்சும் பங்காளதேசம் பலவிதமாநெல்விளையும் பால்வடியுஞ்சம்பா

சிறுசம்பா பெருஞ்சம்பா சீரகச்சம்பா- சிறுமணியும்
பெருமணியுஞ் சிறுராசிநெல்லுகொடிசம்பாமணக்க
த்தை குங்குமச்சம்பா-கொத்துமுத்துச்சம்பா குடை
மல்லிச்சம்பா மல்லிகைச்சம்பா மணமுள்ள சம்பா
வங்காளதேசத்தில் வால்நீண்டநெல்லு-அனுமந்த ச
ம்பா அளவற்றசம்பா அந்தந்ததேசத்தில் விளைந்து
வரும்நெல்லு கடுகுசம்பா மிளகுசம்பாகற்பூச்சம்பா
கன்னிபரிசியுடன்கருப்பு நெல்லரிசி - சோனைமழை
பொழியும் நல்லமலைபாளதேசம் துள்வெள்ளை நெல்
விளையும் தும்பப்பூசம்பா சயமாபர்வதத்தில் விளை
ந்துவரும்சம்பாசமுத்திரத்தில் விளைந்துவருஞ்சடை
சம்பாநெல்லு-சாதகோதாவரியில் விளைந்துவருஞ் ச
ம்பா சதுரான தேசத்தில் விளைந்துவருநெல்லுகாசி
தேசத்தில் விளைந்துவரும்சம்பா கன்னியாகுமரியில்
விளைந்துவருநெல்லு ஸ்ரீரங்கராஜருக்கு விளைந்து வ
ருநெல்லு - திருவரங்கநாயகிக்கு விளைந்துவருஞ்சம்
பா செம்பாளை பூம்பாளைசுகதாசி அரிசிகல்லுண்மை
நெல்லுண்டை கார்போகத்தரிசி கட்டை யரிசிரிடப
கப்பலுள்ள தினுசு மலைதுவரை சிறுதுவரை கடலைச
யருளுந்து மற்றுமந்தகோதும்பை நவதான்யஞ்சே
ளம கரிமஞ்சள்பொடிமஞ்சள் - கப்பமஞ்சள் சாயா
ஞ்சள் மலைதேன்கள் சிறுதேன்கள் கொடிதேன்நக

ல்ல-நாவுக் கிசைந்ததொரு தீவதாக்ஷிகளும் தேன்
பாகுமணப்பாகு சீமைகற்கண்டு சீனிசர்க்கரையோடு
சேர்ந்தநல்லபெல்லம் ஈச்சம்பெல்லம் பனங் கற்கண்
டு உள்ளிவெங்காயம் காச்சிருக்கும் யுளிச்சக்கை நேர
டி முந்துக்கள் களிப்பாக்குசிறுபாக்கு கல்யாண பாக்
கு கற்றகாம்பு கில்வத்திகாட்டுகொம்பரக்குகம்மாரு
கச்சோடு வெந்திலைகள்நல்ல-கடல்முத்துசுண்ணாம்பு
காரமுள்ளபுகையிலை-சீரகம்பெருங்காயம்சதகுப்பை
ஓமம்சேர்ந்ததொருவெந்தயமும் கொத்தமல்லிவிரை
யும் கடுகுகள்மிளகுகள் களிச்சிக்காயேலம் கடுக்காய்
புச் சிறுலவங்கப்பட்டைபொடிபத்திரி சுக்குதிப்பிலி
மோடி செவியமொடு கோஷ்டம்-சடாமஞ்சி அதிம
தூரம் கண்டுபாரங்கிசிற்றரத்தை சிறுதேக்கு செந்தூ
ரம்தும்பராஷ்டம் சிறுநாவல் பூவோடுகோராசாநி ஓ
மம் மற்றுமந்த வாய்விளங்கமராட்டியமொக்கு பா
ங்கிசக்கை கருஞ்சீரகம் காட்டுசீரகம் அதிமதூரம்வெ
ங்கப்பூ தாளிசப்பத்திரி அக்காராகாரங்கள் கடுகுரோ
கணியும் கற்பூராதிஞுசுகள் கட்டிசாம்பிராணி காமு
டன் மெழுகுகள் கட்டிகுங்கிலியம் வெண்காரம் புலி
காரம்படிகாரம் நவாச்சார மிந்துப்புபாதுப்பு சயிந்
துப்புலவணம் துத்திநாகத்தோடு செந்தூரம்பச்சை

சித்திரங்களெலமூதநல்ல அரிதாரநீலம் ஏலக்காய்சா
திக்காய் வால்மிளகு லவங்கம் ஏற்றமுள்ள சாதிக்க
ப்பட்டை குங்குமப்பூ கஸ்தூரி கோரோசனங்கள் கு
மூகுமென்று வர்ச்சிக்கும் பச்சைக்கற்பூரம் சந்தனக்
கட்டையின் சட்டங்கள்புநுகு சலவைபன்னீர்கள் கத
ம்பபொடி யத்தர்பச்சிலேகிச்சிலிகிழங்குகள் பில்லேப
ரிமளம் வீசிவரும் கஸ்தூரிமஞ்சள் சந்தனத்தைலங்
கள் சாம்பிராணிவத்தி சம்பங்கிதைலங்கள் கிலெனெ
ய் பிப்பாய்ஸ்ரீகந்த மகில்கட்டை தேவதாரீகள் தீவிலு
ள்ளசரக்குகள் அபரூபவஸ்துமலேவேர்கள் மலேயாள
சஞ்சீவிநல்ல நிலவேம்பு விஷமூஷ்டி வேம்புடனே
சூர்ணம் செத்தவரைப் பிழைப்பிக்கும் சஞ்சீவிமருந்
து வெட்டுண்டகாயங்கள் ஓட்டநல்லமருந்துவாழாத
பெண்களுக்கு வாழ்வுதரு மருந்து மைந்தரில்லாமல
டிக்கு பிள்ளேதருமருந்து கூடாதஆணும் பெண்ணு
ங் கூட்டிவைக்குமருந்து குற்றங்கள்குறை தீர்க்கும்
குணமுள்ளமருந்து ஆணுடனேபெண்பிரிந்து ஆ
லேந்துகெட்டபேரை ஆசையுடன்கூட்டிவைக்கும் அ
ந்தரங்கமருந்து தேசாந்திரம் ஓடிதிசைகெட்டபேரை
சீக்கிரமாய்கொண்டுவந்து சேர்க்குநல்ல மருந்துஇத்
தனேமருந்துவகை இனியென்னதினுசு இன்னமின்ன
ஞ் சரக்குவகைபேர் சொல்லக்கேளும் பேர்சொல்லா
சரக்குவகை ஆயிரங்கோடி பேர்சொல்லும்சரக்கு வ

கை பதிறுயிரங்கோடி இத்தனைசரக்குவகை யெடுத்துமேகட்டி இசையுடனேகப்ப லெல்லாமொரு வழியாய்த்தள்ளி பத்திரமாய் வழிகளிலே தண்ணீரெல்லாந்தாண்டி பலசரக்கு கப்பல்வந்து சேர்ந்ததையா சுவாமி(ஏலேலோ)

இன்னமின்னஞ் சரக்குவகைநல்லயேத்தமுள்ள கப்பலிலே எண்ணிசொல்லிமுடியாதுகொஞ்சம்- சூட்சமுடன்சொல்லுகிறேன் - கப்பலில்வருந்தினுசுகளை நம்மால்கணக்குசொல்லிமுடியாது(சருர்) பட்டுகள்நாபிதா பச்சைவடமக்மல்பங்காளதேசத்து பாக்காளதுண்டுசோதாராதுப்படி சலவையுருமாலை சரிகைசெய்தபிடவைசாயமுள்ளதோம்பு மெத்தைக்கு தகுந்தமேல்பட்டுஜாலர்விதவிதமாரவைசல்லாவெண்பட்டுசேலை மேலுக்கழகானதொரு மாதளம்பூபட்டு- மக்காவில்வெண்பட்டுமைமைசெங்காப்புபங்காள பட்டுடன்பஞ்சவர்னச்சேலை யச்சமாய்கட்ட பச்சைபீதாம்பர மாத்துருபழவர்க்காடு பாக்குவர்னசேலை ஐதராபாதரில்தாட்டிபத்திரிசேலை மிஞ்சிமுடுக்கான கெஞ்சாத்துசேலை மேலானமேற்கித்திச்சேலத்துச்சேலை கெண்டுகோட்டச்சேலை கொண்டதொருகோடி - கட்டாரிபட்டுபட்டாவர்னச்சேலைமேலானசவுக்களி ரெட்ட

க்குலுக்கி-கண்டதொருவிவியூரில் கொள்ளுநல்லசே
லை-நிலையங்கிபாகைகள் நீண்டிருக்குங்குல்லா-நிஜாரு
டன்பரவாடை யுருமாலைசவுக்கம்-நடுக்கட்டுரவிக்கை
கள் நாலுவிதம்சிட்டி-நார்மடியும்மடிசஞ்சி தேர்தைக்
குங்கித்தான்-ஜார்ஜிக்கும்சகலாத்து சன்னதாவளைய
ல்-சட்டமுடன்துப்பட்டி பங்காளரோக்கு-பார்வைக்கி
மோகிக்குஞ் சீமைநூல்பட்டு - பட்டணத்துபெண்க
ளுக்கு வாங்கநல்லபுடவை-முத்துகள்கல்லுகள் முத்
துரத்நக்கெம்பு-மோகனமாலைகளும்முத்துசரமாலை-
நற்பவழஞ்சாதிலிங்கம் நாலுவிதம்பச்சை-நவரத்தின
கல்லுகள் நாகரீகரவிக்கை-வச்சிரங்கள்வயிடூரியம்மா
ணிக்கநீலம்-மஞ்சணிறங்கோமேதகம்புட்பராகங்கள்
மலிந்தவிலைதருப்புகள்மாங்காளிப்பச்சை-மற்றுமர்த
கப்பலேறிமுத்துவந்ததினுசு-கோர்வைகொலுசுகளுங்
கையிலிடுமுத்து-கோடானகோடி கல்லிழைத்தபாட்
டில்-அடுக்குவளைதோள்வளையல்அதுகுண்டுவங்கி-அ
ழகானபாசிபந்து கையிலிடுங்கொலுசு-கண்டசரம்ச
ரப்பளிகள் கடல்முத்துமாலை - கல்லிழைத்தபட்டப
ங் கழுத்திலிடுங்கண்டி-ஆரங்கள் பதக்கங்கள் அட்டி
கைகள்நல்ல - அதுகளுக்குமேலான மகரகண்டிகை
கள் - காதுக்குநிறைந்திருக்கும் - கத்திரியாவலிகள்-

கம்மலிடுஞ்சிமிக்கிசரம் காதுக்கிசைவாளி - ஆணிமு
த்துகல்லிழைத்த அடுக்குமூக்குத்தி-அழகானபுலா
க்கு அன்னமூக்குத்தி-கலிக்கத்துராகல்லிழைத்தசுட்
டியொடுபட்டம் - காதுக்குநேரான திருநெற்றிசுட்
டி - சந்திரபிறை சூரியபிறை தலைநிறைந்தசாமான்-
தளதளெனகாந்தியுடன் தங்கஒட்டியாணம்- பாதசர
ம்சுருள்கொலுசு சிலம்புதண்டை பாட்டில் - பத்து
விரல்மோதிரங்கள் மிஞ்சியுடன்மெட்டு-காதுக்குசவு
க்களிகள் கல்லிழைத்தகோடி - கண்டசரம் பதக்கங்
கள் முத்துவைடூர்யம்-கையிலிடுமோதிரங்கள் முத்தி
ரைசிகாயம் - கல்லிழைத்த பெருங்கடுக்கன் தங்கவ
ளை அரணை-மார்நிறைந்தபொன்னூல் மகரகுண்டலங்
கள் மண்டலத்து ஜெனங்களுக்கு வாங்கநல்லநகைக
ள்-ஆபரணவகையெல்லா மணிபணியாய்வைத்து-அ
தற்கேற்றபெட்டிகள் பூட்டுகள்சாவி - மோராவிராக
ன்கள் சானாக்காசு - மேலானசீமையார் முத்திரைக
ள்ரூபாய்-ஆதியிலேயுண்டான ஸ்ரீராமர்மேடை-அது
களைச்சார்ந்தவொரு காசுபணந்துட்டு-அரக்குமுத்தி
ரைவைத்து அடையாளங்கட்டி - அடையாளமாகவே
காசுபணமெல்லாம்-அந்தந்தவிடத்தில் பத்திரங்கள்
பண்ணி-சிறுமுத்துபெருமுத்து சிறுராசிமுத்து-சூர
த்திலிளைந்துவருஞ் சுண்டக்காய்முத்து - பருத்தமு

த்துபெருத்தமுத்து பவழநிறமுத்து-பம்பாயிசீமை யிலே விளைந்துவருமுத்து-கடைந்தமுத்து உருண்ட முத்து கட்டாணிமுத்து-கருங்கடலில்விளைந்துவருங் காந்தியுள்ளமுத்து - வாளிமுத்துநீளமுத்து வார்கட் டைமுத்து - வையகத்துஜெனங்களுக்கு வாங்கநல்ல முத்து-ஒட்டுமுத்துதங்கமுத்து சுட்டிமுத்துநல்ல-ஒ ப்பில்லாமாணிக்க ரெவரத்தினங்கள் - கோவர்த்தனகி ரியில் வாங்கிவந்தமுத்து - கோபாலகிருஷ்ணருக்கு சாத்தநல்லமுத்து-அயோத்தியாபுரியில் வாங்கிவந்த முத்து-அபிராமிலட்சுமணருக்குசாத்தநல்லமுத்து- காசிதேசத்தில் வாங்கிவந்தமுத்து - கனமானவர்த்த கர்கள் விலைமதித்தமுத்து-பாதபுரிசீமையிலேவாரிவ ந்தவச்சிரம்-பலமானவர்த்தகர்கள் விலைமதித்தவச்சி ரம்-குடகதேசத்தில் வாங்கிவந்தகெம்பு - கோடிசன வர்த்தகர்கள் விலைமதித்தகெம்பு-டில்லிதேசத்தில்வா ங்கிவந்தபச்சை - தேசத்துவர்த்தகர்கள் விலைமதித்த பச்சை-நாலுதேசத்தில் வாங்கிவந்தரத்தினம் - நகர் சென்னபட்டணத்துறைகள்வந்திறங்க-தங்ககட்டிவெ ள்ளிகட்டி தனித்தனிபாய்வரவே-தாம்பரம்வெங்கல ங்கள் பித்தளை தாராக்கள் - இருப்புசட்டம் ஈயகட்டி பெருங்கம்பிநல்ல - இதுகளைச் சார்ந்தகொரு தண்ட வாளங்கள் - சீமைமண்சாடிகள் சின்னசின்னகுப்பி-

சீசாக்கள்வளையோடு பீங்கான்கள் கிண்ணி-திராவகம்
பிராந்திகள் சாராயப்பீப்பாய் - தனித்தனியாயந்தந்
த இடங்களிலேவைத்து - பச்சைகள் நீலம் குளோ
ப்புகண்ணாடி-பச்சையில்பெரிதான பன்னீருகுப்பி-
கண்ணாடி கதவுகள் கைபெட்டிமேஜை - கவுசிகள் கு
ர்ச்சிகள் கட்டிலொடுதொங்கில்-மெத்தைகள் திண்டு
கள்பிள்ளைதலைக்காணி-விதவிதமாய்மேற்கட்டுபோகு
ந்துறைசாமான் - மெழுகுதிரிகூடார மேக்குகள்வே
ம்பு விதவிதமாய்சினைநாய் குல்லாக்கள் சொக்காய்-
அறக்குவத்தி மெழுகுவத்தி அதற்கேற்றபீடங்கள்-
அலங்காரகூடங்கள் மெழுக்குவத்திராந்தல்-கனகவி
ளக்கதிகோடி காந்தியுள்ளவிளக்கு-கண்ணுக்கு அழகா
னசகுண்டுவரிசை - சதிருக்கு அழகான சாயபொம்
மைகளும்-சாய்ந்திருக்குந்திண்டுகள் சரிகைமேற்கட்
டு-தங்கமொடுவெள்ளிகள் தட்டுதாம்பாளம் - சதருக்
குஎத்கதொரு சாதிக்காய்பத்ரி தகுமானவால்மிளகு
லவங்கமொடுபெட்டி - வெற்றிலை மடித்துகோர்க்கும்
வெள்ளியீக்குகளும் - விதவிதமாய்பன்னீரு குப்பி
பொடிகிண்ணி - பட்டுபாய் பிரப்பம்பாய் படுத்திரு
க்கும் பாவிப்பாய் - பட்டணத்துரைகளுக்குக் கெட்
டிதாழம்பாய் - பட்டுரத்தினக்கம்பளிகள் சோடுசம
க்காளம் - பந்தலுக்கு பேத்கதொரு மட்டபிரப்பம்
பாய் - கண்ணாடி காம்பிராக்கள் கட்டில்கள் சோபா-

காட்டினிலேயுள்ள கலைமான்கள்கொம்பு - கருத்திரு க்குஞ்சவுரிகல்ல வெண்சாமரங்கள் - கிருஷ்ணசல ப்பெட்டி புலித்தோல்கள்நல்ல - உட்கார்ந்துசெபம் பண்ணுஞ் சித்திராசனங்கள் - பட்டுகுடை வெள்ளி குடை பச்சைகுடைநீலம் - பவழகுடை முத்துகு டை தங்கக்குடைவெள்ளை - வீசிவரும்பாவாடை வெ ள்ளித்தடிகள் - வேடிக்கையாகவே கப்பலில்வரவே- தாளிபனைவோலைகள் சீமைகடுதாசி - பேனாக்கள்மி க்கிபுட்டி பிரப்பந்தட்டு பீங்கான் - கோழிகள் சேவு கள் சுவடிபலகைகள்-சிறுராசிபெருராசி ஆடும்பல கைகள்-சங்குகள்பாவாடை சரக்குபித்தளைகள்-சங் டமாய்க்கப்பலிலே திட்டமாய்கட்டி - அஷ்டலட்சு மிபொழியும் ஆனந்தகப்பல்-அளவற்றபாக்கியங்கள் குறைவற்றசெல்வம்-நித்தியலட்சுமிபொழியுந் திருவ ல்லிக்கேணி-நினைத்தவரங்கொடுப்பாளந்த வேதவல் லித்தாயார் - இஷ்டமுள்ளலட்சுமிகடாட்சத்தினாலே ஏற்றமுள்ள கப்பல்வந்து சேர்ந்ததையா சுவாமி(ஏ லேலோ) (௩)

தார்குழலாள் கப்பலிலே (நல்ல) சஞ்சீவிமரு ந்துவகை-வையகத்துஜனங்களுக்கும் (நல்ல) வியா தியருப்மருந்துவகை - பூமியிலே சனங்களுக்கு-ந ல்ல - பொன்னாகும் இலைதினுசு (சரூர்) பேரான

சவாதம் பச்சிலைகள்தினுசு-பெருவியாதிரோகமறுஞ்
சஞ்சீவிமருந்து-சயரோகந்திமிர்வாயுதனூர்வாயுரோ
கம்-கரிமேகம் காமாலை மார்நோவுகுன்மம்-கண்குரு
டுசெவிடுகள் கால்மொண்டிமுடங்கள்-கண்காசபடல
ங்கள் வாங்குநல்லமருந்து-மண்டையிடிதொண்டை
கட்டு மகத்தானரோகம்-மாளாதவியாதிகள் தீர்க்கந
ல்லமருந்து-திருஷ்டிதெரியாத திசைகெட்டபேர்க்
கு-திவியஞ்சனம்நல்ல சீமைதயிலங்கள்-தேசத்துச
னங்களுக்கு செயமுள்ளமருந்து-தேகமெல்லாஞ்சுந்
தரமாய் அழகுதருமருந்து-உலகத்துசனங்களுக்குஉ
பகாரமருந்து-ஒருநாளும்வியாதிகள்வாராதமருந்து-
மனிதர்க்குள்சீமையில்சொரணைகெட்டபேர்க்கு-மத
னகாமேசுரம் அவிழ்தகஞ்சாக்கள்-குல்கந்துவில்வா
தி லேகியந்தானும்-கீழ்நாடுமேல்நாடுபேர்பெற்றமரு
ந்து-மருந்துவகைதினுசெல்லாம்வகைவகையாய்வை
த்து-மற்றுமந்தகப்பலிலே ஆள்மட்டுஞ்சாமான்-கத
வுகுழையிருப்புசட்டம் கைப்பிடிகள்வளையம்-கட்டி
லுக்குந்தொட்டிலுக்கு மூலசட்டசாமான்-தலைக்கட
க்கதவுகள் கைப்பிடிக்குங்குழைகள்-வைரத்தூண்கம்
பங்கள் வெண்கலப்பட்டங்கள் - சாரங்கள் தளங்கள்
சங்கிலிகள்குப்பி - தாவாரய் பெட்டிக்கு நடுப்பூட்டு
சாவி-காடவிளக்குகள் கைவிளக்கு (நல்ல) கலியாண

ப்பந்தலுக்கு யேற்றகுத்துவிளக்கு-தூங்காவிளக்கு
கள் தூங்குபலேகொலுசு - தொட்டிலுக்குசங்கிலிகள்
தோசைகல்லுதுடுப்பு-மண்ணாலுருவானவாணாய்கர
ண்டிமண்வெட்டிகள்-நல்லவெட்டுகுந்தாலி கோடா
லிபிஸ்தோல்-துபாக்கிகள்பீரங்கி குண்டுபல்லயம்-யீ
ட்டிகள் பாக்குகட்டாரி-வெடியாரமணிக்கம்பம் கும்
பினிகள்பாறு-கணைக்குவகைதுனைசொல்ல இடசம்
பிரதிகள்-ஆயுதங்கத்திகள் அலேமான்துருப்பு-ஆழந்
துமீன்தெரியநச்சுகுழல்கொம்பு-ஆனேகள்குதிரைகள்
ஆயிரங்காலாள் - ஆந்தோணிமேனாக்கள் பல்லாக்கு
டோலி-கோரதங்கள்கூண்டுபண்டி சக்கரங்கள்சட்ட
ம்-குதிரைகட்டுசாட்டு தண்டிகைகளோடே - மான்
களொடுமயிலுகள்மாடப்புறவும்-மைனாக்கள்பாத்து
கள் பஞ்சவர்ணக்கிளிகள் - பால்கறக்கநல்ல பசுக்க
ளோடெருமை- பச்சைவெண்ணெய் கடைந்தெடுக்க
மரங்களொடுமற்றும்-சீமையெலிபெருச்சாளி சிறுத்
தையொடுமுயல்கள்-தேவாங்குகருங்குரங்கு புனுகு
பூனேகளும்-செந்நாய்காடிசிவிங்கிகொண்டமுயலும்-
சீமைநாய்வேட்டைநாய் இன்னமின்னம்ஜாதி-கடம்
பைகள்உடும்புகள்கோவேறுகழுதை-கண்ணுக்கழகி
ரானநீர்மனுஷஜாதி - விதவிதமாய்கப்பலில் வேடிக்
கையாக-வேகமுடன்கப்பலிலே விரைவோட்டம்வா

ரவே-சிறுமீன்கள் பெருமீன்கள்சிதறியங்கேயோட-ம
லைபோலேமீன்களெல்லாம் வந்தங்கேநிற்க - தலங்கு
மாகலந்துமேசமைத்தகொழுக்கட்டை-தாமதங்களி
ல்லாமல் எடுத்துமுன்போட்டு - அலைகடல்வழியெல்
லாம் ஒருகொடியில்தாண்டி - ஆனந்தக்கப்பல்வந்து
சேர்ந்துதையாசுவாமி (ஏலேலோ) (௩)

சங்கமாபருவதத்தில் (நல்ல) சந்தனத்தால்சே
ர்ந்தகப்பல் மண்டலத்துசனங்களுக்கு (நல்ல)மாளி
கைக்குமரதினுசு பட்டணத்துசனங்களுக்கு (நல்ல)
பலவிதமாம்பலதினுசு (சரூர்) சதுர்கட்குநிரானை
லுமிச்சம்பழங்கள் - சாதிநார்த்தம்பழச் சக்கரையன்
ஞசி செவ்வாழைப்பழக்குலைகள்சேர்ந்தாஸ்தாளிசெ
வ்விளநீர்சீமை யத்திப்பழங்கள்-கிளிமூக்குமாம்பழ
ம் மணியிலாக்கிச்சிலி - வகையானமாதளம் பழங்க
ளோடுதினுசு-சீத்தாய் பலாப்பழம் சொகுசானசீனி
செடிநாரத்தை கொடிநாரத்தை சீமைகிச்சிலிகள்-
கொய்யாபழம்நல்ல கொத்துதிராட்சிபழங் கொடித
னில்விட்டுவரும்சுட்டுமாம்பழங்கள்-பேரீச்சம்பழநல்
லபருப்புகற்கண்டு-பேராணைச்சூரிகாய்களோடுதினு
சு-பட்டாணிமுந்திரிப பருப்புகள்தினுசு-பழவகைக
ள்தினுசெல்லாம்விதவிதமாய்வைத்து- பங்காளகப்ப

விலைபணியாரகினுசும்-திரட்டுப்பால்மனோகரம்தே
ன்குழல்பூரி-துள்ளுமந்த அதிரசம் பாற்குழம்புலட்டு
சோமாசியென்பது பேணியதுவாகும்-தின்னும்வகை
பலகாரமின்னமின்னங்கொண்டு - சகிபிண்டபிமனுக்
சுற்கரையிட்டாயும் - சாரமுள்ளபாலன்னந் தயிர்வெ
ண்ணெய்பாலும் - புளியோரைததியன்னம் பொங்க
ல்வடைதோசை - போகமாயடிசில்செய்யும்இட்டலி
கள்நல்ல - சக்கரான்னங்களோடு முளகோரையுண்
டைஅக்கரவடிசில்கள் பங்காளபாத்து-வேதவல்லித்
தாயார் அடிசில்செய்யும்வகையை - பணியாரமின்ன
தென்று கணக்கிடப்போமோ-பார்த்தசாரதிக்கே அ
டிசில்செய்யும்வகையை - பணியாரமின்னதென்றுக
ணக்கிடப்போமோ-பணியாரவகைதினுசு பழதினுசு
வகைகள் - பரிமளங்கள்வீசிவரும்புஷ்பவிதசாதி-சம்
பங்கிபுஷ்பங்கள்சாதிமல்லிகைகள் - சாங்களோடுமா
லைகட்டி குருவேர்கள்தவனம் - பன்னீருபுஷ்பங்கள்
பந்திபுஷ்பங்கள் - பட்டுசாமந்திகள் பலவிதங்கள்சா
தி-செண்பகப்பூநல்லசெங்கழுநீராம்பல் - சிறுசெண்
பகத்தோடு சேர்ந்தவகைமல்லி - நீலவண்ணப்புஷ்ப
ங்கள் நீண்டவிருவாட்சி - மேலானசுரபுன்னை முல்
லைசெந்தாமரை - புஷ்பவகைஆயிரங்கள் பொட்டண
ங்கள்கட்டி - பேர்பெற்றதப்பவிலை இன்னமின்னந்

திறுசு - கல்தேக்குநெல்தேக்கு காட்டிலுள்ளமரங்க
ள் - கரிவோடுஇரிவோடு கருப்புமான்சாதி - வெண்
தேக்குபூந்தேக்கு வெட்பாலைமரங்கள் - சிறுவேங்
கைபெருவேங்கை சிமை பனமரங்கள் - சேர்ந்த
தொருவயிரங்களானநல்லபெட்டை - மச்சுகட்டுமா
ளிகைக்கு அச்சுமட்டம்பலகை - மதலைகால் புள்ளிச
ட்டம் மாதிரிப்பலகை-குதிரைப்பட்டை குருவிக்கா
ல் குத்துக்கால்சட்டம்-கூடத்துக்கம்டளங்கள் சரங்க
ளொடுதூலம்-வெழல்கட்டுந்தாலிகள் வாசற்கால்க
தவு-மாளிகைக்குநல்லநல்ல வகைவகையாப்மரங்கள்
சட்டிகள்கல்லாட்சி பலஆணைக்கதவு - கீழ்மெத்தை
மேல்மெத்தை தாங்குநல்லசரங்கள்-அலமாரிக்கதவு
கள் ஆள்களுக்குமனைகள்- அழகானவிசுப்பலகை நா
ற்காலியணைகள்-மரங்கள்வகைநிறுசெல்லாம் வகை
வகையாய்வைத்து-மகாகனமாய்கப்பலிலே வாத்திய
ங்களகோஷ்டம்-முகவீணைநாகசரம் விருதுகள்பேரி
பேளமொடுதாளங்கள் விருதுசின்னங்கள் - தாள
மொடுமத்தளம்தருமவாத்தியங்கள்-இதுகளுக்குமே
லானகிடுகிடுவாத்தியங்கள் - காளாஞ்சிதுந்துபி கனக
தப்பட்டை-பின்னாங்குழல்தாளபிட்டில்வாத்திய
ஙகள்-பெருங்காளெக்காளை சாரங்கிவாத்தியம்-பா
ம்புநாகசுரம்பதினெட்டுவாத்தியம்-பாகவதகோஷ்ட
ங்கள் சங்கீதகீர்த்தனம்-வீணையொடுசின்னங்கள்வே

நார்த்தவேதியங்கள் -தாம்தாமென்றுகப்பலிலே சட்
டமுடன்வரவே-அதிர்வேட்டுகில்புருசு ஆகாசபாண
ம்-அழகானமத்தாப்பு ஐந்துதலைபாணம் - பொரிபா
ணம்வெடிபாணம் இடிவாணவித்தை -புஷ்பபாணம்
நல்லகப்பல்பாணங்கள்· கழல்பாணம்சுழல்பாணம் சீ
றிவரும்பாணம் - சீமையில்செய்துவரும் பலவிதபா
ணங்கள்-கம்பபாணம்நல்ல கையில்விடும்பாணம்-கா
க்துயுளநட்சத்திர பாணங்கள்திணுசு - நீலவர்ண
பாணமொடு சூரியபாணங்கள்-ரீரீயெனப் பேசிவரு
ம் தவளைபாணங்கள்-பாணவகைதினுசெல்லாம்பத்தி
ரமாய்வைத்து-பாங்கானகப்பலிலேபலதேசச்சரக்கு
கொச்சிதேசம்நல்லகுடகுதேசம் - கோகில்புரந்தே
ங்கள் கோபுரங்கள்லக்கணங்கள்-தற்குடம்தேசம் கா
ஞ்சீபுரம்நல்ல - காவேரிதீரங்கண்ணனூருபாயும் நல்
லசோழதேசங்கள் - மலையாளமொடுமதுரைதெற்கு
தேசங்கள்-தஞ்சையொடுதிருநெல்வேலி - பொடுசீ
மைமண்டலங்கள் துண்டீரநகரங்கள்தேசம்- குற்றா
லங்குறநாடு கும்பகோணதேசம் - கோதாவரிதீரங்
கொண்டவட்டிசீமை-ஏபாளம்நேபாளம்பங்காளதே
சம்-வாய்சொல்லுதெரியாத மாறுபாடிதேசம்-இராச்
சியத்தில்செழிப்புள்ள மைசூருதேசம்· நடுச்சோழம
ண்டலம் நாகரீகக்காஞ்சு-அங்கதேசம்நல்ல வங்கதே
சங்கள் அதுகட்குமேலான இன்னமின்னுந்தேசம்-கா

சிதேசம்நல்ல கலிங்கதேசங்கள் - கன்னடருபாயுநல்
லகல்கத்தாசீமை -டில்லிதேசம்நல்லசிந்துதேசங்கள்
திக்குதெரியாத தொருராணிதேசங்கள்-துவருகப்புரி
நல்லகேதாரபுரமும்- வாரணகுருக்ஷேத்திர வடமது
ரையோடு-கீழ்நாடுமேல்நாடு தென்றிடுதேசம்-பப்ர
தேசத்தில் சரக்குகள்கொண்டு-திக்குதிக்குக்காய்கப்
பலெல்லாம் ஒருவழியாய்ச்சேர்ந்து-ஸ்ரீராமஜெயமெ
ன்று எழும்பியேகப்பல் - துப்புகள்நாட்டியவா
ள்ஜலங்களையொதுக்கிசீர்பொழியுங்கப்பல்வருஞ்செ
ய்தியைக்கேட்டு- திக்குதிக்குகள்தோறு வேட்டுகள்
போட்டுசிங்கக்கொடிகட்டிசிங்காரமாகஜெயமுள்ளகப்
பல்வந்துசேர்ந்ததையாசுவாமி(ஏலேலோ.) (௫)

உலகமெல்லாம்பெற்றெடுத்த அம்மாள்- உத்த
மியாள் பத்தினியே மகிமையுடன்தேசமெல்லாம்வந்
தருளுங் கப்பலிலே (சநூர்)மலையாளங்கோட்டுடன்
நீலசேருமுட்டனே-மைசூருகளத்தூரு வந்தேமகிழ்ந்
து-கணமான கோயிலடி யிளங்காடுநேரா - கண்டியூர்
திருக்காடு பள்ளிசெம்பலகை-கோவழுள்ள திருவை
யாறு திருத்தலூர்துறையூர்-கொஞ்சம்பசும்பெதிர்
கோதில தஞ்சைநகர்கண்டென்ன வன்மைக்காவல்
உண்மையைப்பார்த்து- தானையாய்பாய்மரம் மூன்று

பதினாறு-நன்மையென்றுக்தேனுலேசினிக்கலப்பு-ந ற்பமுடன்சொற்பமாய்ப்பாருதந்திரமான-நல்லதுப் பாக்கியம்டிசீராய்-நடுக்கட்டுசொகுசுடனேகட்டிதூ ங்குமஞ்ச-சப்ரமுடகாட்டினார்தாவி-அந்தந்ததே சத்துக்கதிபதிகளாகி-அஷ்டாங்கமாகக்கொண்டு சா ட்டாங்கமாய்நாச்சே (சுக்கிச்சொல்) பந்தியுடனே உலாத்து இங்கிலீசுபிராஞ்சு லாட்டுமேலாட்டுஅனை நாளைப்பீட்டு நீரின்மேல்நெருப்பு கொண்டேபணிந் தவொருபிரங்கிதீர்ந்து-குமுதமுடன்கப்பலிதுசமுக நிலையகண்டுகொண்டெல்லாம்புகழும் வேதவல்லித் தாயார்-துரிதமுடன்கப்பலிதோ தப்பால்வருதப்பா (ஏலேலோ) (௬)

அதிபதியாள்அன்னக்கொடி தருமநிதி புண்யவ தி-அம்பாள்கப்பல்கடலோட்டம்தந்தையா அனை நொடியில்வருகுதிங்கே (சஹூர்) அந்தியேசோழமண் டலமதுகடந்து-அந்தந்ததேவஸ் தலங்களதுகண்டுக ளமுள்ளபழமொழியும் அகமாறுமாதம்-கனத்தவொ ருநெல்விளையும் மற்றுமுள்ளசீமை-அவ்வூரிகப்பலி து ஆனந்தமாக-அன்புடனேசுத்தியல்லோ எல்லைது றைதாண்டி-இருகாதகொப்பு இரட்டவொட்டியா ணம்-இலட்சம்பொன்பெற்றவொருபச்சைவடக்கொ

ண்டு- கொண்டுவந்தம்மனுக்கு கொடுத்தே பணிந்து கோலமுள்ளகப்பலுக்கு மேலும்வழிகாட்டி - சிலமுள்ளகப்பலிது வழிகளெல்லாந்தாண்டி சென்னப்பட்டணத்துறைவந்து சேர்ந்ததையாசுவாமி(ஏலே)

உத்தமியாள் வேதவல்லி-பத்தினியாள் கப்பலிது சித்தமுள்ளபட்டணத்தில்சேர்ந்ததென்றுதான்ட(சரூர்) உலகமாதாவே உத்தமிசாமாட்சி -உமையவள்தன்னருள் உத்தாரம்பெற்று-அமையுமிந்தக் கப்பலுக்குசமையமதுபார்த்து ஆகாரங்கண்டெடுத்து அடித்தட்டில்சேர்த்து-ஸ்ரீகாரங்கண்டெடுத்து சிக்கந்திருப்பி-ககாரங்கண்டெடுத்து கப்பிகயிறுகட்டி - நமசிவாயங்கொண்டு நாங்கூரம்பாச்சி-நாலுவேதத்தாலே பிரங்கியேற்றி- அஷ்டாட்சரத்தாலே காற்றுகளும்பாய அம்மனுடகப்பலிது விஸ்தாரமாக-அன்பாகக்கணபதியைமுன்பாகவைத்து - அந்தமுடன் கப்பல்வந்து சேர்ந்ததையாசுவாமி(ஏலேலோர்) (அ)

கப்பலிலன்றுல்க்கப்பலிது நல்ல-கனமுடையகப்பலிது கப்பல்வரும்பளுவதனைல்சங்கங்கள்கரைபுரண்டுகுமிழியிடும் இருகரையும்நீர்பெருகி தத்தையாஏகசலம்வழிந்திடுமாம் வேதவல்லியதுவறிந்து அம்மன் காவேரியையுச்சரித்தாள் (சரூர்) காவேரிதானறிந்து

வேதவல்லித்தாய்மேல் - கடாட்சம்வைத்துகப்பல்தனை துறைகொணர்ந்துசேர்க்க - கரைபுரண்டுகாவேரி வெகுவெள்ளம்வாரேவ- அம்மனுடைய தன்மகிமை ஆரறிவாரென்று-ஆதிரங்காசந்நிதிக்குப் பின்பாகவேதான் அலைவந்துமோதவே கரைதனிலேயொதுக்கி-உத்தர பாரிசம்ஒருபக்கந்தி நம்பி ஓங்காரமாகவே உருண்டமணல்வாரி- சத்தமிட்டுதத்தளித்து தான்புரண்டுகப்பல்-சதாகாலம்அம்மனை சிந்தைதனிலெண்ணி- வேதவல்லித்தாயாரை தியானமதுபண்ணி-வேகமுடன்இங்குவந்த கப்பலிதுகண்டீர் ஏலேலோ) (௬)

வாழிபலேவாழியவே ரத்நமகமேரு வாழியவே மகாவிஷ்ணுலட்சுமியும்கோவிந்தாயண்டலத்தில்வாழியவே-பிர்மாவும்சரஸ்வதியும்-தக்கையும்-பூமிதனில்வாழியவே (சதுர்) தேவேந்திரனிந்திராணி தேவர்களும்வாழி-திறமுள்ள முனிவர்களும்சித்தர்களும்வாழி-முப்பத்துமுக்கோடி தேவர்களும்வாழி - முதலானாரதரும் கிம்புருடர்வாழி நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளுமேவாழி - நலமுள்ளகருடகாந்தருவர்களும் வாழி.விக்கினவிநாயகரும் திக்கமிகவாழி- வேலவரும்பத்தினிக ளிருவர்களும்வாழி-ஸ்ரீரங்கநாயகரும்ரங்

நாயகியும்-சிலகாரணமான பார்த்தசாரதியும்சீரான வேதவல்லித்தாயாரும்வாழி-மேலான சென்னைபுரியாருகின்றதுரைகள் மேன்மேலும்எந்நாளும் வாழிமிக வாழி-சூப்பிரீங்கோட்டிலுள்ள துரைகளெல்லாம்வாழி-துருப்பிடித்துவழக்கொடுக்கும் எல்லிட்டும்வாழி இன்னஞ்சிலதேசங்களையாளுகிறராசர்-இணையில்லா செல்வங்கள்பெற்றமவர்வாழி-சிலருள்ளாகப்பல்தவிக ற்றவர்கள்கேட்டோர்சிறப்பாய்படிப்போர்கள் ஜெயம்பெற்றுவாழி- கோலமுடனிக்கதையை யின்பமுடன்கேட்டும் குவலயத்துயிர்கள்மிகவாழி (ஏலே.)(௰)

ஸ்ரீபார்த்தசாரதிப்பெருமாள்பேரில்

பலசரக்கு-ஏலப்பாட்டு.

முற்றிற்று,